வைசூரி தடுப்பு

*57 வினு.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா:

(அ) நமது மாநிலத்தில் வைசூரியை தடுப்பதற்கு உபயோக படுத்தப்படும் ரஷிய அம்மைப்பால் மருந்து மிகவும் கடுமையான விளைவுகளை உண்டாக்குவதாக ஏதேனும் புகார்கள் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அந்தக் கடுமையான விளைவைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) ரஷியாவிலிருந்து தருவிக்கப்பட்ட அம்மைப்பாலே Freeze Dried Vaccine) பயன்படுத்துவதால் கடுமையான விளைவுகள் உண்டாவதாக முறையிடு ஏதும் அரசுக்கு வரவில்லை. முதன் முறையாக ரஷியா அம்மைப்பாலைக் கொண்டு அம்மை குத்தப் பட்ட மக்களில் சுமார் 20 முதல் 30 சதவிதம் பேருக்கு சற்றுக் கடுமையான விளைவு ஏற்பட்டதாக சென்னை மாநகராட்சியின் சுகாதார அதிகாரி இப்போது அரசுக்கு அறிவித்துள்ளார். அம்மை குத்தப்பட்டவர்களுக்கு ஏற்கனவே நோய் எதிர்ப்புத் திறன் இல்லாததே இதற்குப் பெரிதும் காரணமாகும். அடுத்த படியாகத் தருவிக்கப்பட்ட அம்மைப்பால் மருந்து சாதாரண விளைவுகளையே உண்டாக்கியது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ரஷ்யாவிலிருந்து வரக்கூடிய அம்மைப்பால் தற்போது கடுமையானதாக இல்லையென்று மாநகராட்சி அதிகாரி கூறியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கிருந்து தருவிக்கக்கூடிய அம்மைப்பால் தரம் உயர்ந்ததா அல்லது தரம் குறைந்ததா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தரம் குறைந்ததாக இல்லை. சற்று விளைவு கடுமையாக இருந்தது. இப்போது தருவிக்கப்படும் அம்மைப்பால் சாதாரண விளைவை உண்டாக்குவதாக இருக்கிறது.

Dr. H. V. HANDE : Sir, is the Minister aware of the fact that three or four years ago when Russian vaccine was used there was serious reaction and that after this information was brought to the notice of the Government only the vaccine was withdrawn and the manufacture of the entire vaccine was given to the King Institute, Guindy ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவேண்டும்.